உ

கணபதி துணை.

சிவபூசைத்திரட்டு.

மூலம்.

ஸ்ரீ கந்தபரம்பரை சூரியனார்கோவிலாதீனத்தில்

எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ முத்துகுமாரதேசிக சுவாமிகளிடத்தில்

அருளுபதேசம் பெற்றுக்கொண்ட

மதுரை திருஞான சம்பந்தசுவாமிகள்

ஆதீனம் - வித்துவான்

ஸ்ரீலஸ்ரீ

சுப்பிரமணியபிள்ளையவர்கள்

மாணாக்கரிலொருவராகிய

ஸ்ரீரங்கம்.

மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையால்

பரிசோதித்து

தேவிகோட்டை ம-ள-ா-ஸ்ரீ

மு. ரா. ம. சி. லெ. சோமசுந்தரஞ் செட்டியார்

பொருளுதவியைக்கொண்டு

சென்னை

கலாட்ஸ்டன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத்திரட்டு.

ஸ்ரீ கந்தபரம்பரை சூரியனார்கோவிலாதீனத்தில்
எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீலஸ்ரீ முத்துகுமாரதேசிக சுவாமிகளிடத்தில்
அருளுபதேசம் பெற்றுக்கொண்ட
மதுரை திருஞான சம்பந்தசுவாமிகள்
ஆதீனம் - வித்துவான்
ஸ்ரீலஸ்ரீ
சுப்பிரமணியபிள்ளையவர்கள்
மாணாக்கரிலொருவராகிய
ஸ்ரீரங்கம்.
மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையால்
பரிசோதித்து
மூ. பு. சி. வெ. சோமசுந்தரம்செட்டியார்
பொருட்சகாயத்தால்

சென்னை
கலாட்ஸ்டன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத் திரட்டு.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருவலிவலம்-திருவிராகம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிடியதனுருவுமை கொளமிகுகரியது
வடிகொடுதனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன் மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறையிறையே.

ஸ்நாநஞ்செய்ய

திருநாவுக்கரசுநாயனார்.

திருவாலங்காடு-பண்-திருத்தாண்டகம்.

ஒன்றுபுலகனைத்துமானார்தாமே
ஊழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றுகியெங்குநிமிர்ந்தார்தாமே
நீர்வளிதீயாகாசமானார்தாமே

சிவபூசைத்திரட்டு.

கொன்றுடுங்கூற்றையுதைத்தார்தாமே
கோலப்பழனையுடையார்தாமே
சென்றுடுதீர்த்தங்களானார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (1)

திருமந்திரம்.

அறிவாரமரர்களாதிப்பிரானைச்
செறிவானுறைபதஞ்சென்றுவணங்கொண்
மறிவார் வளைக்கைவருபுனற்கங்கைப்
பொறியார்புனன்மூழ்கப்புண்ணியராமே. (2)

அனுட்டானஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவாலவாய்த்-திருநீற்றுப்பதிகம்-பண்-கார்தாரம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே. (3)

திருநாவுக்கரசு நாயனார்.

தனித்திருநேரிசை.

சந்திரற்சடையில்வைத்த சங்கரன்சாமவேதி
யந்தரத்தமரர் பெம்மானனல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமச்சிவாயவாக நீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையுநோயும் வெவ்வழல்விறகிட்டன்றே. (4)

திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்.

கருவாய்க்கிடந்துன்கழலே நினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனமம் பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாய நமவென்றுநீறணிந்தேன்.
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரானே. (5)

செபஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-கௌசிகம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (6)

திருநாவுக்கரசுநாயனார்.

பலவகைத்திருத்தாண்டகம்.

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனே போமாறேதோ
மாயமாமிதற்கேதுமிழவேண்டா
சிந்தையீருமக்கொன்று சொல்லக்கேண்மின்
றிகழ்மதியும் வாளரவுந்திளைக்குஞ்சென்னி
யெந்தையார் திருநாமநமச்சிவாய
வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (7)

திருநல்லம்-பண்-திருக்குறுந்தொகை.

அல்லலாகவைம் பூதங்களாட்டினும்
வல்லவாறு சிவாயநமவென்று
நல்லமேவிய நாதனடிதொழ
வெல்லவர்தவினைப்பகைவீடுமே. (8)

பூசைசெய்ய ஆரம்பிப்பதற்குமுன் தோத்திரஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருப்பிரமபுரம்-பண்-நட்டபாடை.

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. (9)

திருநாவுக்கரசுநாயனார்.

திருவதிகைவீரட்டானம்-பண்-கொல்லி

கூற்றாயினவாறுவிலக்கலிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (10)

சுந்தரமூர்த்திநாயனார்.

திருவெண்ணெய்நல்லூர்-பண்-இந்தளம்.

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதே நினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. (11)

திருநாவுக்கரசுநாயனார்.

திருவாலவாய்த்திருத்தாண்டகம்.

மூளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன் முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (12)

பூதசுத்திசெய்ய

திருக்கற்குடி-திருத்தாண்டகம்.

மண்ணதனிலைந்தைமாநீரினன்கை
வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை
விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்
தண்மதியைத்தாரகைகடம்மின்மிக்க
வெண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம
னெழிலழியவெரியுமிழ்ந்தவிமையாநெற்றிக்
கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (13)

சிவனெனுமோசை-பண்-பியந்தைக்காந்தாரம்.

விரிகதிர்ஞாயிறல்லர்மதியல்லர்வேதவிதியல்லர்விண்ணுநிலனுந்
திரிதருவாயுவல்லர்செறிதீயுமல்லர்தெளிநீருமல்லர்தெரியி
லரிதருகண்ணியாளையொருபாகமாகவருள்காரணத்தில்வருவ
ரெரியரவாரமார்பரிமையாருமல்லரிமைப்பாருமல்லரிவரே. (14)

உட்பூசைசெய்ய.

தனித்திருநேரிசை.

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினேமே. (15)

தனித்திருக்குறுந்தொகை.

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே. (16)

கோயிற்றிருக்குறுந்தொகை.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்துவேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ. (17)

தனித்திருநேரிசை.

உடம்பெனுமனையகத்துவுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கிற்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே. (18)

கோயிற்றிருவிருத்தம்.

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினேக்குமுறுவலிப்புந்
திடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே. (19)

சிவபூசைத்திரட்டு.

துவாரபூசைசெய்ய.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருப்புன்கூர்-பண்-தக்கேசி.

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
னவினுக்கரையனாளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (20)

மூவெயில்செற்றஞான்றுயர்தமூவ
ரிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னை
வொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்திருப்புன்கூருளானே. (21)

சிவோகம்பாவனைசெய்ய.

திருவொற்றியூர்-பண்-தக்கேசி.

வழித்தலைப்பகுவான்முயல்கின்றே
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்தநியருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே. (22)

திருநாவுக்கரசுநாயனார்.

கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா

முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னுடல்காண்பானடியனேன்வந்தவாறே. (23)

திரவியசுத்திசெய்ய.

நின்றதிருத்தாண்டகம்.

ஆவாகியாவினிலேந்துமாகியறிவாகியழலாகியவியுமாகி
நாவாகிநாவுக்கோருரையுமாகிநாதனாய்வேதத்தினுள்ளோனாகிப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்புக்குளால்வாசமாய்நின்றானாகித்
தேவாகித்தேவர்முதலுமாகிச்செழுஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே.

மந்திரசுத்திசெய்ய.

புள்ளிருக்குவேளூர்-திருத்தாண்டகம்.

பேராயிரம்பரவிவானோரேத்தும்
பெம்மானைப்பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம்வருவிப்பானை
மந்திரமுந்தந்திரமுமருந்துமாகித்
தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத்
திரிபுரங்கடீயெழத்திண்சிலைகைக்கொண்ட
போரானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (52)

பெட்டகக்கோயில்திறக்க.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்மினே. (26)

பெட்டகக்கோயிலினின்றும் உடையவரை

எழுந்தருளப்பண்ண.

திருப்புள்ளிருக்குவேளூர்-திருத்தாண்டகம்.

ஆண்டானையடியேனையாளாக்கொண்டு
வடியோடுமுடியயன்மாலறியாவண்ண

நீண்டானைநெடுங்கனமாநகரான்றன்னை
நேமிவான்படையானீஞரவோனுகங்
கீண்டானைக்கேதாரமேவினனைக்
கேடிலியைக்கிளர்பொறிவாளரவோடென்பு
பூண்டானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றுதேயாற்றநாள்போக்கினேனே. (27)

ஸ்நானவேதிகையில்

உடையவரையெழுந்தருளச் செய்தபின்சொல்ல.

கடுவாய்க்கரைத்திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை.

பர்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனைமணவாளனைமாமலர்க்
கந்தநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தையீசனைக்கண்டினிதாயிற்றே. (28)

இலிங்கசுத்திசெய்ய.

நின்றதிருத்தாண்டகம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகி
யியமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிறாகி
யாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்
பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகி
நிமிர்புன்சடையடிகணின்றவாறே. (29)

அஷ்டபுஷ்பஞ்சாத்த.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை.

அட்டமாமலர்சூடியடம்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுநான்மறைபாடியு
மிட்டமாகவிருக்குமிடமிதே. (30)

தூபதீபம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருச்சண்பைநகர் திருவிராகம்-பண்-சாதாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர் தூபமொடுதீபமலிவாய்மையதனு
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள் செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகுந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (31)

எண்ணெய்க்காப்பு.

கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

ஆடினாய்நறுநெய்யொடுபால்தயிர் அந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும்பலசடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்கவெம்தொல்வினையே. (32)

நெல்லிக்காப்பு.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநீலக்குடி-திருக்குறுந்தொகை.

செய்யமேனியன்றேனொடுபால்தயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாங்
கையில்ஆமலகக்கனியொக்குமே. (33)

பஞ்சகவ்விய அபிஷேகம்.

பாவநாசத்திருக்குறுந்தொகை.

பாவமும்பழிபற்றறவேண்டுவீர்
ஆவிலைஞ்சுகந்தாடுமவன்கழல்
மேவராய்மிகவும்மகிழ்ந்துள்குமின்
காவலாளன்கலந்தருள்செய்யுமே. (34)

பஞ்சாமிர்த அபிஷேகம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருச்செங்காட்டங்குடி-பண்-பழந்தக்கராகம்.

பாலினொடுநெய்யாற்பழத்தினாற்பயின்றாட்டி
நாலினன்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (35)

நெய்யபிஷேகம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருப்புகலூர்-திருத்தாண்டகம்.

நெய்யாடிநின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானே
மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலை
கொண்டடியேனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (36)

பாலபிஷேகம்.

திருவெண்காடு-திருக்குறுந்தொகை.

பாலையாடுவர்பன்மறையோதுவர்
சேலையாடியகண்ணுமைபங்கனார்
வேலையார்விடமுண்டவெண்காடர்க்கு
மாலையாவதுமாண்டவரங்கமே. (37)

தயிரபிஷேகம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருவோணகாந்தன்றளி-பண்-இந்தளம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தல்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லெவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டமூர்துவேற்கு
வுய்யுமாறொன்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. (38)

தேனபிஷேகம்.

திருவாவடுதுறை-பண்-தக்கேசி.

வானநாடனேவழித்துணைமருந்தே
மாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாவெயிறுமையுமென்பு
மீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பால்தயிராட்டுகந்தானே
தேவனேதிருவாவடுதுறையு
ளானையேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவுமரர்களேறே; (39)

கருப்பஞ்சாறபிஷேகம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவீழிமிழலை-திருத்தாண்டகம்.

ஆலைப்படுகரும்பின்சாறுபோல
வண்ணிக்குமஞ்செழுத்தினுமத்தான்காண்
சீலமுடையடியார்சிந்தையான்காண்
டிரிபுரமூன்றெரிபடுத்தசிலையினான்காண்
பாலினொடுதயிர்நறுநெய்யாடினான்காண்
பண்டரங்கவேடன்காண்பலிதேர்வான்காண்
வேலைவிடமுண்டமிடற்றினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (40)

பல்கனிச்சாறபிஷேகம்.

திருவிடைமருதூர்-திருக்குறுந்தொகை

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (41)

இளனீரபிஷேகம்.

திருவீழிவிழலை-திருத்தாண்டகம்.

நெய்யினொடுபாலிளநீராடினான்கா
ணித்தன்மணவாளனெனநிற்கின்றான்காண்

கையின்மழுவாளொடுமானேந்தினன்காண்
காலனுயிர்காலாற்கழிவித்தான்காண்
செய்யதிருமேனிவெண்ணீற்றினன்காண்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினன்காண்
வெய்யகனல்விளையாட்டாடினன்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (41)

சந்தனக்குழம்பபிஷேகம்.

தனித்திருநேரிசை.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேறநோக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே. (43)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருக்கானப்பேர்-பண்-கொல்லி.

வாவிவாய்த்தங்கியநுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலே
நாவிவாய்ச்சாந்துநும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றூட்டுவார்தொண்டரே. (44)

தூபம்.

திருச்செங்காட்டங்குடி-பண்-பழந்தக்கராகம்.

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சுனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதிச்சரத்தானே. (45)

சுத்தஜலஅபிஷேகம்.

திருவிடைமருதூர்-பண்-தக்கராகம்.

தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையரர்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (46)

உடையவரைப்பீடத்திலெழுந்தருளப்பண்ண

திருப்புள்ளிருக்குவேளூர்-பண்-சீகாமரம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானுருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (47)

ஆவாகனஞ்செய்ய.

திருநாவுக்கரசு நாயனார்.

சித்தத்தொகை-திருக்குறுந்தொகை.

அண்டமாரிருளுடுகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே. (48)

திரு இன்னம்பர்-திருக்குறுந்தொகை.

என்னிலாருமெனக்கினியாரில்லை
யென்னிலுமினியானொருவன்னுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே. (49)

சிவதருமோத்தரம்-பரிகாரவியல்-89-ம்-திருவிருத்தம்

உச்சிமுகமீசானமொளிதெளியபளிங்கே
யுத்தரபூருவதிசையைநோக்கியுறுமுவந்தே
நிச்சயித்தமுகத்தின்கீழ்ப்பூர்வதிசைநோக்கி
நிகழுமுகந்தற்புருடங்கோங்கலர்போனிறமே
யச்சுறுத்துமகோரமுகமறக்கரிதுகராள
மவிழ்தாடிவலத்தோளிற்றென்னோக்கியமருஞ்
செச்சை நிறந்தெரிவை முகமிடத்தோண்மேல்வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தியோசாதந் திகழ்பால்.

அர்க்கியங்கொடுக்க.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருநனிபள்ளி-பண்-பியந்தைக்காந்தாரம்.

தோடொருகாதனாகி யொருகாதிலங்கு சுரிசங்கநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெர்தையிடமாயகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலா
னாடுடனாடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளிபோலுநமர்காள்.

கோவணம்பாவனைசாத்த.

திருக்கொள்ளிக்காடு-பண்-காந்தாரபஞ்சமம்.

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொள்கையினவின்றசெய்கைய
ராவணங்கொண்டெமையாள்வராயினுங்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே. (52)

கீள்பாவனைசாத்த.

திருநாவுக்கரசுசுவாமி நாயனார்.

திருப்பராய்த்துறை-திருக்குறுந்தொகை

பட்டநெற்றியர்பான்மதிகக்கிற்றினர்
நட்டமாடுவர்நள்ளிருளேமமுஞ்
சிட்டனார்தென்பராய்த்துறைச்செல்வனார்
இட்டமாயிருப்பாரையறிவரே. (53)

பரிவட்டஞ்சாத்த.

திருப்பருப்பதம்-திருநேரிசை.

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினாரே. (54)

சந்தனஞ்சாத்த.

திருக்கீழ்வேளூர்-திருத்தாண்டகம்

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடியைநான பயம்புக்க
தாளானைத்தன்னைப்பாரில்லாதானைச்
சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த
தோளானைத்தோளாமுத்தொப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த
கீளானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (55)

திருவாபரணஞ்சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருக்கைச்சினம்-பண்-சீகாமரம்.

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையானடரவம்பூண்டுகந்தான்
றிங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினன்மேவியுறைகோயில்கைச்சினமே. (56)

திருநாவுக்கரசு நாயனார்.

தனித்திருத்தாண்டகம்.

நின்னவார்பிறரின்றிநீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய்
மன்னனாய்மன்னவர்க்கோரமுதமானாய்
மறைநான்குமானாயாறங்கமானாய்
பொன்னனாய்மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை
யென்னையென்னையென்னினல்லா
லேழையேனென்சொல்லியேத்துகேனே. (57)

பூணனூல்சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருநணா-பண்-காந்தாரம்.

முத்தேர்நகையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த

சிவபூசைத்திரட்டு.

வத்தேனளியுண்களியாலிசைமுரலவர்லத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநாணவே. (58)

புஷ்பாஞ்சலி.

திருநாவுக்கரசுநாயனார்

திருவையாறு-திருவிருத்தம்.

நின்போலமரர்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
வென்போலிகள்பறித்திட்டவிலையுமுகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளுமையனையாறனடித்தலமே. (59)

இண்டைசாத்த.

ஷை திருஏகம்பம்-பண்-காந்தாரம்.

அண்டமாயாதியாயருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர்பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர்தூவிச்சிசான்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே. (60)

திருப்பள்ளித்தாமஞ்சாத்த.

திருப்பராய்த்துறை-திருக்குறுந்தொகை.

போதுதாதொடுகொண்டு புனைந்துடன்
தாதவிழ்சடைச் சங்கரன்பாதத்துள்
வாதைதீர்க்கவென்றேத்திப்பராய்த்துறைச்
சோதியானைத்தொழுதெழுந்துய்ம்மினே. (61)

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

திருஏகம்பம்-பண்,இந்தளம்.

மொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்.
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே (62)

போகாங்கமூர்த்தி பூசைக்குத்தியானம்.

சிவதருமோத்தரம்-பரிகாரவியல்-91ம் விருத்தம்.

திருவுருவந்தெளிபளிங்குதிரிநயனம்பிறையுஞ்செறிசடையர்வலக்கரத்திற்றிரிசூலம்வரதங், கருதுகமற்றையகரத்திற்செபமாலையபையங்காருணிகர்க்கீசானர்க்கவர்தமக்குக்கனிட்டர், திருவுருவங்கோங்கினலாதிரிநயனங்கரமுன்செப்பியதேதிருநாமந்தற்புருடதேவர், வரியரவுமிளம்பிறையுஞ்சடைமுடியின்வைத்தார்மலரடியைமறவாதார்வல்வினையைமாய்ப்பார். (63)

இதுவுமது-92-ம்-விருத்தம்.

கரியவுருவெரியசடைகபால நிரைமாலைகராளமுகங்கவிழ்தாடிகண்மூன்றுவட்டங், கரதலங்களொருநான்குங்கட்டுரைத்தபடியே காட்டின முன்னிருநான்குகரமுமுளரென்றே, வெருவியிடமருவலரை வெருட்டியவுக்கிரத்துவிக்கிரகாகோரமெனவிளம்பு பெயருடையார், இருபதமுமொருபொழுதுமறவாதேயேத்தியெண்ணு மவரிடர்வினையையிடிப்பார்களென்றும். (64)

இதுவுமது-93-ம்-விருத்தம்.

தேமொழியாளுமையென்னத்திருமுகமுந்தோடுந், திலதமுதற்சிறப்புமிருளளகவிதச்செறிவும், வாமமெனுந்தேவர்க்குவாய்த்தனவேசெம்மைவடிவுமவர்கரதலங்கண்ணுதிதனில்வகுப்பே, சேமவுருத்திகழ்சங்கஞ்சடாமுடியிற்பிறையுந்திரிநயனங்கரதலங்கள்செப்பியமுற்படியே, நாமமதுசத்தியோசாதமெனநவின்றநாதற்கு நயந்தவரைநினைக்கவினைநாசம். (65)

இதுவுமது-94-ம்-விருத்தம்.

திருவுருவமிருதயர்க்குத்தவளமெனத்தெளிக சேடித்தவுறுப் பனைத்துஞ்செப்பியமுற்படியே, திருவுருவங்கனகமெனச்சிரத்தினுக்குத்தெளிகசேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே. திருவுருவஞ்சிந்தூரமெனத் தெளிகசிகைக்குச்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே, திருவுருவம்வண்டினிறங்கராளமுகங்கவசஞ்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே. (66)

இதுவுமது-95-ம்-விருத்தம்.

ஒவ்வொன்றேதிருமுகமுநேத்திரங்கட் குணரிலுட லொளியுமிரவிமதியுதாசனனையொக்கு, மிவ்விரண்டேகரதலமும்வரமபையமவையுமிவ்விரண்டேவிழியுமெனவெண்ணிமிகவெழிலார், செவ்வரத்தந்திருவுருவங்கரதலமீரைந்துந்திருநயனமொருமூன்றுஞ் சினத்திடித்தகுரலு மிவ்வகையெல்லாமுடையரத்திரரென்றியம்புமிவரடியை யிருதயத்தினிருத்தினிடரிலையே. (67)

நிவேதனம்செய்ய.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருஏகம்பம்- பண்-த்க்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானை
யாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையானைச்
சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கை
யென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (68)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருஏகம்பம்-திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

கலியார்கச்சிமலியேகம்பம்
பலியாற்பாற்றநலியாவினையே. (69)

அடைக்காம்பு.

திருநாவுக்கரசுநாயனார்

திருப்புறம்பயம்-திருத்தாண்டகம்.

ஆகாதநஞ்சுண்டவந்திவண்ண
ரைந்தலையமாசுணங்கொண்டம்பொற்றோண்மே
* லேகாசமாவிட்டொன்றேந்திவந்
திடுதிருவேபலியென்றார்க்கில்லேபுக்கேன்
பாகேதுங்கொள்ளார்பலியுங்கொள்ளார்
பாவியேன்கண்ணுளேபற்றிநோக்கிப்
போகாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (70)

---

* விட்டோடொன்றேந்திவந்-சன்றும்பாடம்.

தூபம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருக்கழிப்பாலை-பண்-கௌசிகம்.

வெந்தகுங்கிலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (71)

தீபம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருவையாறு-திருத்தாண்டகம்.

எல்லாவுலகமுமானாய்நீயே
யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயே
ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (72)

திருமறைக்காடு-திருத்தாண்டகம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லா
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (73)

திருநீறுசாத்த.

திருவாரூர்-பண்-காந்தாரம்.

நீறுமெய்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துளானும்.
ஏறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானு
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (74)

* தர்ப்பணந்தெரிசிப்பிக்க.

திருவாரூர்-திருவிருத்தம்.

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலமென்றிவற்றா
லாம்படிமக்கலமாகிலுமாரூரினிதமர்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலஞ்செய்துதொழுதுய்மடநெஞ்சமே. (75)

ஜெபம்பண்ணின பின்பு அர்க்கியங்கொடுக்க.

சுந்தரமூர்த்திநாயனார்

திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-பழம்பஞ்சரம்.

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கிலுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (76)

குருவர்ச்சனையுள்வணக்கம்.

திருக்காளத்தி-பண்-நட்டராகம்.

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வே
னெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (77)

அருச்சனை செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருப்பாம்புரம்-பண்-தக்கராகம்.

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடையர்
அக்கினொடாமைபூண்டழகாகவனலதுவாடுமெம்மடிகண்
மிக்கசுல்வேதவேள்வியுளெங்கும்விண்ணவர்விரைமலர்துவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (78)

அச்சிறுபாக்கம்-பண்-குறிஞ்சி.

ஏறுமொன்றேறிநீறுமெய்பூசி
யிளங்கிளையரிவையோடொருங்குடனாகிக்

* தர்ப்பணமென்பது-கண்ணாடி.

கூறுமொன்றருளிக்கொன்றையந்தாருங்
குளிரிளமதியமுங்கூவிளமலரு
நாறுமல்லிகையுமெருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியுமிவைநலம்பகர
வாறுமோர்சடைமேலணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (79)

திருப்புள்ளிருக்குவேளூர்-பண்-சீகாமரம்.

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானிரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குவேளூரே. (80)

திருமந்திரம்.

அம்புயநீலங்கழுநீரணிநெய்தல்
வம்பவிழ்பூகமுமாதவிமந்தாரந்
தும்பைவகுளஞ்சுரபுன்னைமல்லிகை
செண்பகம்பாதிரிசெவ்வர்திசாத்திடே. (81)

எழுந்துகும்பிட.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவாவூர்ப்பசுபதீச்சரம்-பண்-நட்டபாடை,

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார்கும்பிடுவோர்தமக்கன்புசெய்வார்
ஒற்றைவிடையினர்நெற்றிக்கண்ணுருறைபதியாகுஞ்செறிகொள்மாடஞ்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடநிதானநல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதீச்சுரம்பாடுநாவே. (82)

பிரதக்ஷணஞ் செய்ய.

திருநாவுக்கரசுநாயனார்

திருவாரூர்-திருத்தாண்டகம்,

மதிதருவனெஞ்சமேயுஞ்சுபோக
வழியாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதியென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றுந்

துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமேயென்றென்றேகதறுகில்லே, (83)

ஜெபித்துச்சாத்த,

சுந்தரமூர்த்திநாயனார்

திருவாரூர் - பண் - புறநீர்மை,

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
மூந்தியெழும்பழையவல்வினைமூடா முன்
சிந்தைபராமரியாத்தென்திருவாரூர்புக்
கெந்தைபிரானரையென்றுகொலெய்துவதே, (84)

திருநாவுக்கரசுநாயனார்

திருவீழிமிழலை-திருக்குறுந்தொகை,

கருவனேகருவர்ய்த்தெளிவார்க்கெலாம்
ஒருவனேயுயிர்ப்பாயுணர்வாய்நின்ற
திருவனேதிருவீழிமிழலையுட்
குருவனேயடியேனைக்குறிக்கொளே, (85)

ஆனந்தத்தால்கூத்தாடல்,

கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி,

பார்த்திருந்தடியனேனன்பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னைமூவரில்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கூர்ப்பாய்தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடானான்வந்தவாறே, (86)

நமஸ்காரம்பண்ணுவதற்குமுன்செய்யுந்துதி.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

திருப்புன்கூர் - பண் - தக்கேசி.

இயக்கர்கின்னரர்யமனெடுவருண
ரியங்குதிவளிஞாயிறுதிங்கள்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்

அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுபாரருள்கண்டு
திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (87)

நமஸ்காரஞ்செய்ய,

திருநாவுக்கரசுநாயனார்

தனித்திருநேரிசை,

அங்கத்தைமண்ணுக்காக்கியார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாநின்னைச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதனாயேனுன்னை
யெங்குற்றாயென்றபோதாலிங்குற்றேனென்கண்டாயே. (88)

தனித்திருக்குறுந்தொகை.

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாயுனைநானுந்தொழுவனே. (89)

ஷை

வாழ்த்தவாயும்நினைக்கமடநெஞ்சுந்
தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (90)

திருமருகல-திருக்குறுந்தொகை.

பெருகலாந்தவம்பேதைமைதீரலாந்
திருகலாகியசிந்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணங்கவே. (91)

நமஸ்காரஞ்செய்து எழுந்திருக்கும்போது துதிக்க.

திருக்கடம்பூர்-திருக்குறுந்தொனக.

பொய்தொழாதுபுலியூரியோன்பணி
செய்தெழாவெழுவார்பணிசெய்தெழா

வைதெழாதெழுவாரவரெள்கநீர்
கைதொழாவெழுமின்கரக்கோயிலே. (92)

தோத்திரஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவலிவலம்-பண்-பழந்தக்கராகம்.

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியேன்
ஆயுநின்பாலன்புசெய்வானாதரிக்கின்றதுள்ளம்
மாயமாயகாயந்தன்னுளேவர்கின்றுன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (93)

திருநாவுக்கரசு நாயனார்.

தனித்திருத்தாண்டகம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
யொப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோருருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயமுர்ந்தசெல்வனீயே. (94)

திருவாவடுதுறை-திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
வுருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
யருவாயவல்வினைநோயடையாவண்ண
மாவடுதண்மறையுறையுமமரரேறே. (95)

திருக்கடவூர் திருநேரிசை.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன் மாயமுந்தெளியகில்லேன்

அழிவுடைத்தாயவாழ்க்கையைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே. (96)

திருவதிகைத்திருவீரட்டானம்-திருநேரிசை.

கழித்திலேன்காமவெர்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனான்கணோக்கியுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்டேன்
அழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனீரே. (97)

திருக்கோடிகா-திருநேரிசை.

கேழல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினனே
யேழையேனேழையேனானென்செய்கேனெந்தைபெம்மான்
மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (98)

திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததிவண்ணனே. (99)

கோயிற்றிருவிருத்தம்

படைக்கலமாகவுன்னைமத்தெழுத்தஞ்செனவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்பும்முனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (100)

திருவாரூர்-போற்றித்திருத்தாண்டகம்.

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றி
சதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி
பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றி
புண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி
யங்கமலத்தயனோடுமாலுங்காணா
வனலுருவாநின்பாதம்போற்றிபோற்றி
செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (101)

சுந்தரமூர்த்திநாயனார்

திருவிடைமருதூர்-பண்-தக்கேசி.

கொடுக்கக்கிற்றிலே னெண்பொருடன்னைக்குற்றஞ்செற்றமிவைமுதலாக. விடுக்கக்கிற்றிலேன் வேட்கையுஞ்சினமும்வேண்டிலெம்புலனென்வசமல்ல,நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்திநமன்றமர்நரகத்திடலஞ்சி, யிடுக்கணுற்றனனுய் வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (102)

திருமழபாடி-பண்-நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (103)

திருக்கடவூர்-பண்-நட்டராகம்.

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே (104)

திருவாவடுதுறை-பண்-தக்கேசி.

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனே திருவாவடுதுறையுள்
அப்பனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (10

ஷை

குறைவிலாநிறைவேகுணக் குன்றேகூத்தனே குழைக்காதுடையானே, யுறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தாலழிவுண்டே, சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனேதிருவாவடுதுறையுள், அறவனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (106)

எட்டாந்திருமுறையாகிய திருவாசகம்.

திருச்சதகம்-97-ம்-பாசுரம்.

உடையாதனேபோற்றிநின்னலாற்பற்றுமற்றெனக்காவதொன்றினி, யுடையனேபணிபோற்றியும் பராரத்தம் பராப்பராபோற்றியாரினுங் கடையனுயி

னேன் போற்றியென்பெருங் கருணையாளனேபோற்றியென்னேநின், னடிய
னுக்கினாய்போற்றியாதியுமந்தமாயினாய்போற்றியப்பனே. (107)

அடைக்கலப்பத்து-அ-ம்-பாசுரம்.

மாவவெகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ளம்
ஆகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (108)

குழைத்தபத்து-எ-ம்-பாசுரம்.

அன்றேயென்றனுவியுமுடலுமுடமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்மூக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானேவிதற்குநாயகமே. (109)

ஒன்பதாந்திருமுறையாகிய கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

திருச்சாட்டியக்குடி-பண்-பஞ்சமம்.

செங்கணுபோற்றிதிசைமுகாபோற்றி சிவபுரநகருள்வீற்றிருந்தஅங்கணு
போற்றி யமரனேபோற்றி யமரர்கடலைவனேபோற்றி, தங்கணுன்மறைநூல்
சகலமுங்கற்றோர் சாட்டியக்குடியிருந்தருளும், எங்கணுயகனேபோற்றியேழி
ருக்கையிறைவனேபோற்றியேபோற்றி. (110)

சேந்தனார்-திருப்பல்லாண்டு.

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (111)

பத்தாந்திருமுறையாகிய திருமந்திரம்,

போற்றுகின்றேன்புகழ்ந்தும்புகழ்ஞானத்தைத்
தேற்றுகின்றேன்சிந்தைநாயகன்சேவடி
சாற்றுகின்றேனன்றையோசிவயோகத்தைப்
போற்றுகின்றேனெம்பிரானென்றுநானே. (112)

பதினோராந்திருமுறையில்

காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

அக - ம் - பாசுரம்.

காலனையும்வென்றோங்கடுநரகங்கைகழன்றோம்
மேலையிருவினையும்வேரறுத்தோங்—கோல
அரணாரவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சரணாரவிந்தங்கள்சார்ந்து. (113)

ஷை திருமுறையில் ஐயடிகள்காடவர்கோனாயனார்

அருளிச்செய்த க்ஷேத்திர வெண்பா.

20 - ம் - பாசுரம்.

கன்னெஞ்சேயுன்னையிரந்துமுரைக்கின்றேன்
* கன்னெஞ்சேய்வாயாகிற்காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்தானையுரித்தானைவண்கச்சி
யேகம்பத்தானையிறைஞ்சு. (114)

ஷை திருமுறையில் சேரமான்பெருமானாயனார்

அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி.

91 - ம் - பாசுரம்.

கொற்றவனேயென்றுங்கோவணத்தாயென்றுமாவணத்தால்
நற்றவனேயென்றுநஞ்சுண்டியேயென்றுமஞ்சமைக்கப்
பெற்றவனேயென்றும்பிஞ்ஞகனேயென்றுமன்மதனைச்
செற்றவனேயென்றுநாளும்பரவுமென்சிந்தனையே. (115)

பட்டணத்துப்பிள்ளையாரருளிச்செய்த

திருவெண்காட்டுத்திருவிசைப்பா.

பூதமுங்கரணம்பொறிகளைம்புலனும்பொருந்தியகுணங்களோர்மூன்றும்
நாதமுங்கடந்தவெளியிலேநீயுநானுமாய்நிற்குநாளுளதோ
வாதமுஞ்சமயபேதமுங்கடந்தமநோலயவின்பசாகரனே
ஏதுமொன்றறியேன்யாதுநின்செயலேயிறைவனேயேகநாயகனே. (116)

---

* கன்னஞ்செய்வாயாகிற என்றும்பாடம்

யாவரேயிருந்தும்யாவரேவாழ்ந்தும்யாவரேயெமக்குறவாயும்
தேவரீரல்லாற்றிசைமுகமெனக்குத்திருவுளமறியவேறுளதோ
பாவலானொருவன்செந்தமிழ்க்கிரங்கிப்பரவையாரூடலைமாற்ற
ஏவலாளாகியிரவெலாமுழன்றவிறைவனேயேகநாயகனே. (117)

உண்டதேயுண்டுமுடித்ததேயுடித்துமடித்தடித்துரைத்ததேயுரைத்தும்
கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவுள்நாளெல்லாம்
விண்டதாமரைமேலன்னம்வீற்றிருக்கும்விழவருவீதிவெண்காடா
அண்டரேபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே. (118)

பன்னிரெண்டாந் திருமுறையாகிய பெரியபுராணம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (119)

கோயிற்புராணம் - ஈராயிரம்.

3 - ம்- பாசுரம்.

தற்பரமாய்ப்பரபதமாய் தாவிலனுபூதியதாய்
அற்புதமாயாரமுதாயானந்தநிலையவொளிப்
பொற்பினதாய்ப்பிறிவிலதாய்ப்பொருளாகியருளாகுஞ்
சிற்பரமாமம்பரமாந்திருச்சிற்றம்பலம்போற்றி. (120)

ஓமத்துக்குப்பின் உபயகாலபூசையோகாங்க

மூர்த்திமுதலியோருக்குப் பராமுகங்கொடுத்துக்கூட்டி

ஜெபஞ்சாத்தினபின் துதி.

திருநாவுக்கரசுநாயனார்

திருக்கடம்பந்துறை - திருக்குறுந்தொகை.

பூமென்கோதையுமையொருபாகனை
யோமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே, (121)

உடையவரைப் பெட்டகக்கோயிலில் எழுந்தருளப்பண்ண.

திருஏகம்பம் - பண் - காந்தாரம்.

கைப்போதுமலர் தூவிக்காதலித்துவானோர்கண்
முப்போதுமுடிசாய்த்துத்தொழுனின்றமுதல்வனை
யப்போடுமலர் தூவியைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. (122)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருக்குடவாயில் - பண் - காந்தாரம்.

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயிற்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (123)

சண்டேசுரநாயனார்.

திருநாவுக்கரசுநாயனார்

திருக்குறுக்கை - திருநேரிசை.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (124)

பெட்டகக்கோயில்சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருமறைக்காடு - பண் - இந்தளம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
விதுநன்கிறைவைத்தருள்செய்கவென்கண்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (125)

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத்திரட்டு முற்றிற்று.

பின்புசாந்தி நிமித்தம்.

அகோரமந்திரம் ஜெபித்து

இயன்றஸ்தோத்திரம் பண்ணுக.

பட்டணத்துபிள்ளையார்பாடல்.

கையொன்றுசெய்யவிழையொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்றுவஞ்சகரொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே. (1)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (2)

சொல்லால்வருங்குற்றம்சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூல்
அல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (3)

கொல்லாமற்கொன்றதைத்தின்னுமற்றுத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவினும்பொய்
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றேகையர்மாயையிலே
செல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே (4)

நீறூர்த்தமேனியுரோமஞ்சிலிர்த்துளநெக்குநெக்குச்
சேறூய்க்கசிந்துகசிந்தேயுருகிநின்சீரடிக்கே
மாறூத்தியானமுற்றூனந்தமேற்கொண்டுமார்பிற்கண்ணீர்
ஆறாய்ப்பெருகக்கிடப்பதென்றேகயிலாயத்தனே. (5)

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெயஞ்
சொல்லார்நற்கோயிலியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்கொல்லுண்டாய்கச்சியேகப்பனே. (6)

பின்புசாந்தி நிமித்தம்

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. (7)

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவைநன்னூர்தப்பினாற்
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே. (8)

அஞ்சருளைப்போற்றியைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்குநினைவுநான்சொல்லுகேன்
வஞ்சகத்தைக்கிமறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச்சிந்தைசெய்வாய்நெஞ்சமே. (9)

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.